செ.வெ.எண்: 34 நாள்: 22.03.2017

# பத்திரிக்கைச் செய்தி

## ஆதார் எண்ணை வங்கி கணக்குடன் இணைத்தல் மற்றும் **RuPay Card** பெற்றுக்கொள்வதற்கான சிறப்பு முகாம்

அரியலூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் அனைவருக்கும் **தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்** கீழ் சேமிப்பு வங்கி கணக்கு துவக்க தெரிவிக்கப்பட்டு துவக்கப்பட்டுள்ளது அவ்வாறு வங்கி கணக்கு துவங்கப்பட்டு, பணபரிவர்த்தனைகள் மேற்கொள்ள **RuPay Card** பெற்று செயல்படுத்தி கொள்ளுதல் மற்றும் ஆதார் எண்ணை வங்கி கணக்குடன் இணைக்காதவர்கள் வங்கி கணக்குடன் இணைத்துக்கொள்ள மாவட்ட நிர்வாகம் மூலம் **சிறப்பு முகாம்** நடத்தப்பட உள்ளது.

ஊரக பகுதிகளில் அனைத்து ஊராட்சிகளில் உள்ள கிராம ஊராட்சி சேவை மையங்கள் மற்றும் பாரத ஸ்டேட் வங்கி (State Bank of India) 14 கிளைகளிலும் 20.03.2017 **திங்கள் கிழமை** முதல் 24.03.2017 வெள்ளிக்கிழமை வரை 5 நாட்கள் தொடர்ந்து **சிறப்பு முகாம்** நடைபெற உள்ளது. அதில் இதுவரை **RuPay Card** பெறாதவர்கள் அதற்கான விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் இந்த முகாமில் இதுவரை ஆதார் எண்ணை தங்கள் வங்கி கணக்குடன் இணைக்காதவர்கள் தற்போது இணைத்துக்கொள்ளலாம். எனவே, பொதுமக்கள் தகுந்த ஆவணங்களுடன் வந்து முழுமையான பயனை பெற இம்முகாமினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.